

# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | ஏப்ரல் 06, 2023 | புரட்சி 22 | முழக்கம் 12 | விலை: ரூ.3.00


# “பெரியார் எனும் பெருவிளக்கு நமக்கு உறுதுணை”



அண்ணல் காந்தியும், தந்தை பெரியாரும் ஒப்பற்றத் தியாகிகளும் இணைந்து முன்னெடுத்த வைக்கம் போராட்டம், தமிழ்நாட்டில் சமூக நீதிப் போராட்டங்களுக்கு வழிகாட்டியாக இருந்தது. இதுவே பின்னாளில் இந்தியாவிற்கே சமூக நீதிக்கான விதையாக அமைந்தது.

பெரியார், அய்யா முத்து, டி.கே. மாதவன், கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப், நீலகண்ட சாஸ்திரி, காந்திராமன், மண்ணத்து பத்மநாபன் போன்ற தியாகிகளை மீண்டும் அறிமுகப்படுத்தி, அவர்களின் உணர்வுகளை இளைய சமுதாயத்திற்கும், மக்களுக்கும் ஊட்ட வேண்டிய பொறுப்பு இப்பொழுதும் நமக்கு இருக்கிறது.

சனாதனக் கொடுமைகளைத் தகர்த்தெறிய வேண்டிய இந்த நேரத்தில் ஜாதிய மதவாத சக்திகளும் தலைதூக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். தேசத்தை இருளில் ஆழ்த்தும் இவர்களை விரட்ட பெரியார் எனும் பெருவிளக்கு நமக்கு உறுதுணையாக இருக்கும். எனக்கு மனிதப் பற்றைத் தவிர வேறு எந்தப் பற்றும் இல்லை என்று சொன்ன மாசற்றத் தலைவராய் சமூக சீர்திருத்தத்திற்கு வித்திட்டவர் தலைவர் பெரியார்.

அவரது தேவை தமிழ்நாடு மற்றும் இந்தியாவிற்கு மட்டுமல்ல ஒட்டு மொத்த உலகத்திற்கே தேவை. இதை உணர்ந்து சகோதரர்களாய் கரம் கோர்த்து சமத்துவம் படைக்க உறுதி ஏற்போம்.

**– வைக்கம் பொதுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்**

## கடைகடையாக வசூல் பணி : மக்களைச் சந்தித்து மாநாட்டுத் துண்டறிக்கைகள்

# களப்பணியில் தோழர்கள் உற்சாகம்



*ஏப். 29, 30 சேலம் மாநாட்டுப் பணிகளில் தோழர்கள் ஒவ்வொரு நாளும் கடை கடையாகச் சென்று வசூல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.*

**சென்னை :** ஏப்ரல் 29.30 தேதிகளில் சேலத்தில் நடைபெறவுள்ள மாநில மாநாட்டை ஒட்டி சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பாக மார்ச் 29, புதன்கிழமை அன்று ஆயிரம் விளக்கு பகுதியில் பொதுமக்கள் மற்றும் வணிகர்களிடத்தில் துண்டறிக்கை வழங்கி பரப்புரை மேற்கொண்டனர்.

இரண்டாவது நாளாக 30.03.2023 அன்று மாலை 7 மணியளவில், சேத்துப்பட்டு பகுதி கடைவீதிகளில் நடைபெற்றது.

திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் இராஜேஷ் தலைமையில், வீரா, குமார், லட்சுமணன், மாணிக்கம், விஜயகாந்த், யாழினி, அருண்குமார், அருண் ஆகியோர் கலந்து கொண்டு துண்டறிக்கை பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

மயிலைப் பகுதி சார்பாக 30.03.2023 அன்று மாலை 7 மணியளவில் தேனாம்பேட்டை திருவள்ளூர் சாலையில் இராவணன் தலைமையில் பிரவின், கார்த்திக், உதயா, உமாபதி, சிவா, மனோகர் உள்ளிட்ட தோழர்கள் கடைவீதி வசூலை மேற்கொண்டனர்.

மூன்றாவது நாளாக மார்ச் 31 மாலை 7 மணியளவில், மயிலாப்பூர் பகுதி சார்பில், மயிலை இராவணன் தலைமையில் தேனாம்பேட்டை, எல்டாம்ஸ் ரோடு, பெரியார் மார்கெட் மற்றும், இராயப்பேட்டைப் பகுதி சார்பில் பகுதிச் செயலாளர் அருண் தலைமையில் சூளைமேடு சுற்றியுள்ள பகுதிகளில் கடைவீதிகளில் துண்டறிக்கைப் பிரச்சாரம் மற்றும் வசூல் நடைபெற்றது.

மயிலை உதயா, பிரவீன், கார்த்திக், சிவா ஆகியோரும், இராயப்பேட்டை இராஜேஷ், அருண், யாழினி, உதயகுமார், மாணிக்கம், குமார், அருண்குமார் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர்.

நான்காம் நாள் 01.04.2023 மாலை 7 மணியளவில், நங்கநல்லூர் மார்கெட் பகுதி கடைவீதிகளில் நடைபெற்றது.

துண்டறிக்கை பிரச்சாரம் இரம்யா தலைமையில் நடைபெற்றது. மேலும், நங்கநல்லூர் பகுதி அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் அருண், இராஜேஷ், வீரா, குமார், மாணிக்கம், விஜயகாந்த், யாழினி, அருண்குமார், ப்ரீத்தி, சூர்யா ஆகியோர் கலந்து கொண்டு துண்டறிக்கை பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

மயிலை பகுதி கழகம் சார்பில் தேனாம்பேட்டை எல்டாம்ஸ் ரோடு பகுதியில் கடைவீதி வசூலை தோழர்கள் உமாபதி, பிரவீன், உதயா, விஷ்ணு, பிரசாந்த் ஆகியோர் மேற்கொண்டனர்.

**நங்கவள்ளி :** 25.3.2023 அன்று நங்கவள்ளி பகுதியில் தனிநபர் வசூல் செய்யப்பட்டது. வசூல் தொகை ரூ.29000/–.

வசூல் பணியில் பங்கெடுத்துக் கொண்டத் தோழர்கள் மாவட்ட அமைப்பாளர் அன்பு, தலைமை குழு உறுப்பினர் சக்திவேல், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், ஆர்.எஸ். பகுதி பொறுப்பாளர் முரளி, அருள், சிவக்குமார், குமார், பன்னீர்செல்வம், சந்திரசேகர்.

29.3.2023 அன்று நங்கவள்ளி, தானாபதியூர், பனங்காடு பகுதிகளில் தனிநபர் வசூல் செய்யப்பட்டது. வசூல் தொகை ரூ. 11,500. வசூல் பணியில் பங்கெடுத்துக் கொண்ட தோழர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர் காவை ஈசுவரன், காவை விக்னேஷ், கிருஷ்ணன், தங்கதுரை, ராமசந்திரன், நங்கவள்ளி அருள், உமாசங்கர், பிரபாகரன், கவியரசு.

29.3.2023 அன்று நங்கவள்ளி பகுதியில் தனிநபர் வசூல் செய்யப்பட்டது. வசூல் தொகை 17500 ரூபாய். வசூல் பணியில் பங்கெடுத்துக் கொண்ட தோழர்கள் மாவட்ட அமைப்பாளர் அன்பு, ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், நங்கவள்ளி பொறுப்பாளர் அருள்குமார், வனவாசி நகரச் செயலாளர் உமா சங்கர்.

**எடப்பாடி :** 31.3.2023 அன்று சேலம் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக மாநில மாநாட்டு கடை வசூல், எடப்பாடி பகுதியில் காலை 12 மணிக்கு மாவட்ட அமைப்பாளர் அன்பு தலைமையில் நடைபெற்றது.

எடப்பாடி பகுதியில் உள்ள தமிழ் உணர்வாளர்களும், சிறு வியாபாரிகளும், அரசு அதிகாரிகளும், குறிப்பாக எடப்பாடி சார்பதிவாளர் தமிழ்ச்செல்வி மாநாட்டின் நிதியாக பெரும் தொகையை வழங்கி எங்களை உற்சாகப்படுத்தினார்.

எடப்பாடி காவல் நிலையத்தில் இருக்கக்கூடிய காவல் துறை நண்பர்களும் மாநாட்டு நிதியை வழங்கி ஆதரவு தெரிவித்தனர். குறிப்பாக திராவிடர் கழகத்தைச் சேர்ந்த எடப்பாடி அன்பு மதி, காலை முதல் இரவு வரை வசூல் குழுவில் உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொண்டார். வசூல் தொகை 21,070 ரூபாய்.

கலந்து கொண்ட தோழர்கள் நங்கவள்ளி பகுதி சிவக்குமார், சுடர்மணி, நிறைமதி, அருள், ராஜேந்திரன், அன்பு, மேட்டூர் ஆர்.எஸ். பகுதி நாகராஜ்,

(4ஆம் பக்கம்)

# கலாக்ஷேத்ராவைக் காப்பாற்றத் துடிக்கும் சனாதன சக்திகள்

பார்ப்பனர்களின் புனித பீடங்களாக கருதப்படுவதில் ஒன்று கலாக்ஷேத்ரா. நாடாளுமன்றத்தில் தனிச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து அதன் மூலம் உருவாக்கப்பட்ட நிறுவனம். அந் நிறுவனம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துப் போட்டிருக்கிறது. இங்கு நடைப்பெறுகிற நடனக் கல்லூரியில் நடனம் பயில்வதற்கு ஏராளமான வெளிநாட்டு மாணவ மாணவிகள் வருகிறார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இக்கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை தரப்படுவதாக புகார்கள் எழுந்து வருகின்றன. இந்த மாணவிகள் நிறுவனத்தின் இயக்குனர்களாக இருக்கிற ரேவதி ராமச்சந்திரன், நடனத்துறை தலைவராக இருக்கிற ஜோஷ்னா மேனன் ஆகியோரிடம் பாலியல் தொல்லைக் குறித்து பல புகார்கள் கூறியும் அதுவும் கடந்த ஐந்து ஆண்டுகளாக புகார்களை தந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாணவிகள் போராட்டம் தீவிரமடைந்தது.

இதற்குப் பிறகு கடந்த மார்ச் மாதம் 21ஆம் தேதி தேசிய மகளிர் ஆணையம் தலையிட்டு ஒரு பேராசிரியர் மீது பாலியல் தொந்தரவு செய்ததாக வழக்குப் பதிவு செய்யுமாறு தமிழ்நாடு காவல்துறை இயக்குனருக்கு அறிவுறுத்தியது. அதற்குப் பிறகு கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு அதே தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் ரேகா சர்மா இந்த நிறுவனத்திற்கு வந்து மாணவிகள், நிர்வாகிகள், பேராசிரியர்கள் என அனைவரையும் சந்தித்தார். இவரது நிலையில் பாதிக்கப்பட்ட மாணவிகளை தனியாக சந்திக்காமல் பேராசிரியர்கள் இயக்குநர்களை வைத்துக் கொண்டு கருத்து கேட்டுள்ளார். தமிழ்நாடு மகளிர் ஆணையம் தலையிட்டு கலாக்ஷேத்ரா இயக்குநருக்கு நேரில் ஆஜராக சம்மன் அனுப்பியுள்ளது. பாலியல் புகாருக்கு உள்ளான ஹரிபத்மன் என்ற பேராசிரியர் தலைமறைவான நிலையில் அவரை வடசென்னையில் காவல்துறை கைது செய்துள்ளது.

அதன் பிறகு மாணவிகள் கூறுகிற புகார்களில் எந்தவித உண்மையும் இல்லை, பத்திரிக்கை செய்தி யூகத்தின் மூலம் அவர்கள் பேசுகிறார்கள் என்று கூறிவிட்டு ஏற்கனவே இந்த ஆணையம் சம்பந்தப்பட்ட பேராசிரியரை கைது செய்ய தமிழ்நாடு காவல்துறைக்கு அறிவுறுத்தியதை திரும்ப பெற்றுக் கொள்வதாக அறிவித்துவிட்டு அவர் டெல்லிக்கு புறப்பட்டு விட்டார்.

ரேகா சர்மா தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர், அதே ஆணையத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக குஷ்புவும் அதில் இடம்பெற்றுள்ளார். ஆனால் இந்த பிரச்சனையில் இருந்து குஷ்பு முழுவதுமாக விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்.

நியாயமாக இந்த நிறுவனத்திற்கு தலைவர் ரேகா சர்மா வந்தபோது குஷ்புவும் உடன் சென்று இருக்க வேண்டும். ஆனால் குஷ்பூவை அவர்கள் ஏன் அழைக்கவில்லை என்பதற்கு மகளிர் ஆணையம் தான் விளக்கம் கூற வேண்டும்.

இந்த நிலையில் இது குறித்து எதிர்கட்சிகள் கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றை சட்டமன்றத்தில் கொண்டுவந்தனர். கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்துப் பேசிய தமிழக முதலமைச்சர், "யார் தவறு செய்திருந்தாலும் உறுதியானால் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவித்திருப்பது பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்றாகும். இது குறித்து விசாரிக்க அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவையும் அமைத்திருக்கிறார் முதலமைச்சர்.

ஒரு பேராசிரியர் மீது முன்னாள் மனைவி தந்த புகாரின் பேரில் வழக்கும் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. கலாக்ஷேத்ரா பெருமை மிக்க நிறுவனம், இதன் பெருமை சீர்குலைந்து விடக்கூடாது என்று பார்ப்பனர்கள் ஒரு வாதத்தை முன்வைத்து இங்கே எந்தவித முறை முறைகேடுகள் நடந்தாலும் மூடி மறைக்க வேண்டும் என்பதற்கான செயல்களை செய்து வருகின்றனர்.

தேசிய மகளிர் ஆணையமும் ஒன்றிய கலாச்சார துறையும் மூடி மறைக்கின்ற உண்மைகளை தமிழ்நாடு அரசு தலையிட்டு உண்மைகளை வெளிக்கொண்டு வந்து குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று அறிவித்திருப்பதை நாம் பாராட்டி வரவேற்க வேண்டும்.

தமிழக பா.ஜ.க.வோ அதன் தொங்கு சதையாக மாறியுள்ள அதிமுகவோ இது குறித்து வாய் திறக்கவில்லை.

# வைக்கம் போராட்டத்தில் நாகம்மையார்



- பெரியாரின் இணையர் நாகம்மையார், சகோதரி கண்ணம்மாள் மற்றும் பெரியாரின் உறவுப் பெண்கள் வைக்கம் போராட்டத்தில் பங்கேற்றனர். 1924 - மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நாகம்மையார் வைக்கத்திலேயே தங்கி போராட் டத்தை நடத்தினார்.
- நாகம்மையார் 'தீண்டப்படாத' பிரிவைச் சார்ந்தவர் அல்ல; எனவே அவர் வீதியில் அனுமதிக்கப்பட்டார். தன்னுடன் 'தீண்டப்படாத' ஜாதிப் பெண்ணையும் அழைத்துச் சென்றதால் அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. வீதியில் நடந்து சென்று கோயிலுக்குள்ளும் நுழைந்து வழிபாடு நடத்த முயலுகிறார். உடன் தீண்டப்படாத ஜாதிப் பெண்ணை அழைத்து வந்ததால் எதிர்த்தார்கள். பிறகு கோயிலுக்கு வெளியே 'தீண்டப்படாத' ஜாதிப் பெண்ணுடன் சேர்ந்து வழிபாடு செய்தார். தனக்குக் கிடைத்த வீதிகளில் நடக்கும் உரிமையை கோயில் வழிபாட்டு உரிமையையும் தீண்டாமைக்கு எதிரான போராட்டத்துக்குப் பயன்படுத்தினார் நாகம்மையார்.
- நாகம்மையார் 'சாணார்' பெண்களுடன் கோயில் வழிபாட்டுக்கு போகும்போது ஒரு பார்ப்பனர் பெரிய தடியை வைத்துத் தடுத்தார். அந்தப் பார்ப்பனர் பேச்சுத் திறனும் கேட்கும் திறனும் இழந்தவர். அருகில் நின்ற பார்ப்பனர்களுடன் நாகம்மையார் எதிர்வாதம் செய்தார். அடுத்த நாள் கொட்டும் மழையில் நனைந்து கொண்டு 3 மணி நேரம் போராட்டம் நடத்தினார்.
- அடுத்த நாள் (1924, ஜூலை 13) நாகம்மையார், பெரியார் சகோதரி கண்ணம்மாள், பெரியார் சித்தி, பி.கே. கல்யாணி அம்மாள் தடையை மீறி போராடச் சென்றபோது காவலர்கள் தடுத்து நிறுத்தி, "பாம்புகள் இருக்கின்றன; போனால் கடிக்கும்" என்று மிரட்டினார்கள். எங்களைக் கடிக்காது என்று கூறி நாகம்மையார் மறியல் செய்தார்.
- பெரியார் சிறைப்பட்டிருந்த காலத்தில் நாகம்மையார் வீடு திரும்பி விடவில்லை. ஒரு முறை நாகம்மையாரும் கைதாகி 'ரிமாண்ட்' செய்யப்பட்டுப் பெரும் துன்பத்தை அனுபவித்தார்.

**தகவல் : பழ. அதியமான் எழுதிய 'வைக்கம் போராட்டம்' நூல்**

*வைக்கம் : சில வரலாற்றுக் குறிப்புகள்*

# நம்பூதிரிகளின் திமிர்

- *வைக்கத்தில் தீண்டாமையை நம்பூதிரிகளும் நாயர்களும் நியாயப் படுத்தினர். போராட்டத்தைக் கடுமையாக எதிர்த்தவர்களில் ஒருவர் தேவன் நீலகண்டன் நம்பியாத்திரி என்ற நம்பூதிரிப் பார்ப்பனர். காந்தி இவரை சந்தித்துப் பேச விரும்பினார். 'இண்டம் துருத்திமனை' என்ற இடத்தில் வாழ்ந்த இந்த நம்பூதிரி ஒரு நிலப்பிரபு. இவரது கட்டுப்பாட்டின் கீழ் 48 "பிராமணக்" குடும்பங்கள் இருந்தன.*
- *காந்தி வைசியர் என்பதால் இவரை தனது வீட்டுக்குள் விட மறுத்த இவர், தனியாக ஒரு தாழ்வாரத்தை உருவாக்கி காந்தியுடன் பேசினார். அவர் காந்தியுடன் பேசிய கருத்துகள் பச்சையான பார்ப்பன வெறியை வெளிப்படுத்தின.*

*"முற்பிறப்பின் மோசமான கர்மாவின்படி நெருங்க முடியாத ஜாதியில் அவர்கள் பிறந்திருக்கிறார்கள்; எனவே அவர்களை அப்படித்தான் நடத்த வேண்டும்."*

*"கொள்ளையர்கள், குடிகாரர்களைவிட இவர்களை மோசமாக நடத்த வேண்டும்; இவர்கள் சட்டபடி குற்றவாளிகள் என்பதால் அவர்களை ஒதுக்கி வைக்க முடியும்; ஆனால் தீண்டப்படாத வர்களை சட்டம் தண்டிக்காத நிலையில் எங்களிடம் நம்பிக்கையால்தான் தண்டிக்க வேண்டும். எங்களது ஆச்சாரியார்கள் இதைத்தான் எங்களுக்கு கற்பித்திருக்கிறார்கள்."*

*"எங்களால் தண்டனை பெறுவதற்காகவே அவர்கள் இந்த உலகத்தில் பிறந்திருக்கிறார்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்."*

*"இவர்கள் கோயில் வீதிகளில் நடக்க நீதிமன்றம் அனுமதித்தால் அந்தக் கோயில்களையே நாங்கள் புறக்கணித்து விடுவோம்"*

*– என்று பேசினார், அந்த நம்பூதிரி.*

***(இந்த உரையாடல் முழுவதையும் சுருக்கெழுத்தில் எழுதி பதிவு செய்தவர் கிருகத்துவ அய்யர். இது ஆவணமாக இருக்கிறது. ஆதாரம்: பழ. அதியமான நூல்)***

*வைக்கம் : சில வரலாற்றுக் குறிப்புகள்*

# பெரியார் பேச்சு: மிரண்டது திருவாங்கூர் சமஸ்தானம்

- வைக்கம் மகாதேவன் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் 'தீண்டப்படாத' சமூகத்தினர் நடப்பதற்கு தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து தொடங்கியது வைக்கம் போராட்டம். தொடங்கிய நாள் 1924, மார்ச் 30. 1925 நவம்பர் 23இல் போராட்டம் முடிவுக்கு வந்தது. ஒரு வருடம் 9 மாதங்கள். அதாவது 604 நாட்கள் போராட்டம் நடந்தது. தீண்டாமைக்கு எதிராக மக்களைத் திரட்டி நீண்டகாலம் நடந்த இந்த உரிமைப் போர் தான் பிறகு கோயில் நுழைவுப் போராட்டத்துக்கு வித்திட்டது.
- போராட்டம் தொடங்கிய 15ஆவது நாளில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த பெரியார், போராட்டக்காரர்களான நீலகண்டன் நம்பூதிரிபாத், ஜார்ஜ் ஜோசப், டி.ஆர். கிருஷ்ணசாமி அய்யர் எழுதிய அவசர கடிதத்தை ஏற்று, வைக்கம் புறப்பட்டார். நீங்கள் வந்தே தீர வேண்டும்; போராட்டத்தைத் தொடர முடியவில்லை; 18 பேர் சாகக் கிடக்கிறார்கள் என்று அந்தக் கடிதம் கூறியது.
- கடிதம் ராஜாஜி - காந்திக்கும் எழுதப்பட்டது. அவர்கள் செவிசாய்க்கவில்லை. ராஜாஜியிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்து விட்டுப் புறப்பட்டார் பெரியார். ராஜாஜிக்கு பெரியார் இந்தப் போராட்டத்தில் பங்கேற்பதில் உடன்படவில்லை.
- வைக்கம் வந்து சேர்ந்தவுடன் பெரியார் நடத்திய 15 நாள் பிரச்சாரத்தில் திருவாங்கூர் சமஸ்தானம் அலறியது. திருவாங்கூர் அரசர் உயர்பதவிகளில் தாழ்த்தப்பட்டோரையும் பணியாட்களாக "பிராமணர்' களையும் நியமித்து தனது வர்ணாஸ்ரம எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார். நம்பூதிரிகளும், நாயர்களும் தான் தீண்டாமையை நியாயப்படுத்துகிறார்கள் என்றார் பெரியார்.
- இந்துக்கள் சில குறிப்பிட்ட வேலையை செய்வதால் தீண்டத்தகாதார் ஆகி விடுவாரா? மனித உடலில் வலது கைக்கு ஒரு வேலை; இடது கைக்கு ஒரு வேலை என்று பிரித்து வைத்திருக்கிறீர்கள். அதேபோல் சமூகத்திலும் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒரு வேலை என்று ஏன் பிரிக்கிறீர்கள்? ஒவ்வொரு கைக்கும் தனித்தனியாக தந்தை தாய் உண்டா என்று கேட்டார் பெரியார்.
- திருவிதாங்கூர் சமஸ்தானம் கோட்டயம் மாவட்டத்தில் பிரச்சாரம் செய்ய பெரியாருக்கு முதலில் தடை போட்டது. தடையை மீறுவேன் என்றார் பெரியார். அடுத்து திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்குள் நுழையத் தடை போட்டது. தடைகளை உடைத்து வைக்கம் ஆசிரம கட்டிடத்துக்கு வெளியே பெரியார் பேசினார். மக்கள் உணர்ச்சி ஆரவாரம் செய்தனர். அடுத்த மூன்று நாட்களில் பெரியார் கைது செய்யப்பட்டார்.
- காவல்துறை அதிகாரிகள் பிச்சு அய்யங்கார், நாராயணபிள்ளை நீதிமன்றத்தில் பெரியாருக்கு எதிராக சாட்சியமளித்தனர். பெரியார் எதிர்வழக்காட மறுத்து விட்டார்.

**- பழ. அதியமான் நூலிலிருந்து**

# ஜாதித் தடைகளை உடைத்த வைக்கம்... நூற்றாண்டைத் தொட்ட வரலாற்றின் பக்கங்கள்...

**வை**க்கம் என்ற சொல் கேரளாவில் பலவற்றுடன் தொடர்பு உடையது. எழுத்தாளர் வைக்கம் முகமது பஷீர், பாடகர் வைக்கம் விஜயலட்சுமி, வைக்கத்தப்பன் கோயில் என வைக்கம் பல வகையில் பிரபலமானது. பெரும்பாலான இந்தியர்கள் காந்தியுடன் வைக்கத்தை தொடர்புப்படுத்தி பேசுவார்கள். தமிழ்நாட்டில் வைக்கம் என்றால் அது பெரியாரின் அடையாளமாக இருக்கிறது.


ஆனால் சமூக இயக்கத்தின் அடிப்படையிலான விளைவுகள் வைக்கத்திற்கு அதற்கும் மேல் இருக்கிறது. கேரள மாநிலம் கோட்டயத்தில் உள்ள வைக்கத்தோடு தொடர்புடைய மிக முக்கிய நாள் மார்ச் 30. வைக்கம் கோயில் தெரு நுழைவுப் போராட்டம் தொடங்கப்பட்டதன் நூற்றாண்டு, இந்த ஆண்டு மார்ச் 30ஆம் தேதி எட்டியிருக்கிறது. 1924ஆம் ஆண்டில் இதே நாளில்தான் அப்போராட்டம் தொடங்கப் பட்டது. இந்தியாவில் கோயில் நுழைவுப் போராட்டங்களின் மிக முக்கிய மைல்கல் வைக்கம் போராட்டம். வைக்கம் மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகளைப் பயன்படுத்துவதில் ‘தீண்டப்படாதோர்’ எனக் கருதப்படும் சமூகங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக இந்த அகிம்சை இயக்கம் நடத்தப்பட்டது.

1936ஆம் ஆண்டு கேரளாவில் நடந்த கோயில் நுழைவுப் போராட்டத்தின் முன்னோடியாகவும் வைக்கம் போராட்டமே இருந்தது. டி.கே.மாதவன், கே.பி.கேசவ மேனன் உள்ளிட்டோரால் வைக்கம் போராட்டம் தொடங்கப்பட்டது. காந்தியின் ஆலோசனையும் இப்போராட்டத்திற்கு இருந்தது. இந்த போராட்டம் நிலையாகவும் வெற்றிகர மாகவும் நடைபெற்றதற்கு மிக முக்கியக் காரணமாக இருந்தவர் பெரியார். அன்றைக்குப் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார் பெரியார்.

**பெரியாரின் நுழைவும், நிபந்தனைகளும்:** கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த நபர்கள் நுழைய அனுமதிக்க மறுக்கப்படுவதை எதிர்த்து, கேரள காங்கிரஸின் ஆதரவுடன், தீண்டாமைக்கு எதிரான குழு மார்ச் 30, 1924 அன்று போராட்டத்தைத் தொடங்கியது. சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் இந்தப் போராட்டம் நீடித்தது. போராட்டத்தில் பங்கெடுத்த பல்வேறு தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். திடீரென ஏப்ரல் 9-ஆம் தேதி எல்லோரையும் கைதுசெய்வதை காவல்துறை நிறுத்தியது. காவல்துறையின் கோபம் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களை நோக்கி மட்டும் திரும்பியது. தலைவர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டதால், ஒருகட்டத்தில் போராட்டத்தை தலைமையேற்று நடத்த தலைவர்கள் இல்லாமல் போனது.

இதனால் நீலகண்டன் நம்பூதிரி, ஜார்ஜ் ஜோசப் உள்ளிட்ட தலைவர்கள் பெரியாரை போராட்டத்திற்கு தலைமையேற்று நடத்த அழைத்தார்கள். அதனைத் தொடர்ந்துதான் பெரியார் வைக்கம் சென்று, போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். பெரியார் அங்கு ஆற்றிய பங்களிப்பிற்காகவே நவசக்தி ஆசிரியரும், தமிழ் அறிஞருமான திருவிக, பெரியாரை வைக்கம் வீரர் என போற்றினார்.

கைதுகள், விசாரணைகள், சிறைக் கொடுமைகள், எதிர்ப்புகள், இந்து மேலாதிக்கவாதிகளின் தாக்குதல்கள் என



ஒவ்வொரு நாள் போராட்டத்திற்கும் பல பக்கங்கள் இருக்கின்றன. பஞ்சாபில் இருந்து அகாலிகள் வைக்கத்திற்கு வருகை புரிந்து போராட்டக்காரர்களுக்கு உணவளித்தார்கள். தலைநகரை நோக்கிய 13 நாள் பேரணிக்கு உயர் ஜாதியினரின் ஆதரவும் கூட இருந்தது. கோயில் தெருக்களில் அனைத்து சமூகத்தினரும் நுழைய (சஞ்சாரா என போராட்டம் அழைக்கப்பட்டது) அனுமதிக்கும் வகையில் கேரள சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றும் கொண்டுவர முயற்சிக்கப்பட்டு தோல்வியில் முடிந்தது. அரசு, போராட்டக்காரர்கள், பார்ப்பன உயர்ஜாதி இந்துக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமூக தீர்வுகாண காந்தியும் வருகைபுரிந்தார்.

இது உள்ளூர் போராட்டமாக மட்டுமே இருக்க வேண்டுமென்று காந்தி அறிவுறுத்தியதால், அகில இந்திய போராட்டமாக உருப்பெற வாய்ப்பு ஏற்படாமல் போனது. அரசு மற்றும் நிர்வாகத்தைக் கொண்டு போராட்டத்தை ஒடுக்கவும் மேலாதிக்க உயர்ஜாதி இந்துக்கள் பல சதிகளில் ஈடுபட்டனர். வன்முறைகளைத் தூண்டும் விதமாக எதிர்ப்புப் பேரணிகளையும் நடத்த அவர்கள் தயங்கவில்லை. மேலாதிக்க இந்துக்களின் வெளிப்படையான ஆதரவும், அரசாங்கத்தின் மறைமுக அழுத்தமும்தான் சட்டமன்றத் தீர்மானம் நிறைவேற்றப்படாமல் தோற்கடிக்கப்பட்டதற்கு காரணமாக இருந்தது. ஆனால் அனைத்துத் தடைகளையும் வைக்கம் சத்தியாகிரத்தினர் தாண்டினர். போராட்டத்தில் தமிழர்கள் பங்கெடுத்தனர். கோயில் தெருக்களில் அனைத்து சமூகத்தினரும் நுழைய தமிழர்கள் ஆதரவுக்கரம் நீட்டினர்.

**வைக்கம் போராட்டத்தில் தமிழர்களின் பங்கு:** வைக்கம் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது. தீண்டாமைக் கொடுமைக்கு ஆளானவர்களின் போராட்டத்தை அடையாளப்படுத்தியது. பெரியார், கோவை அய்யாமுத்து உள்ளிட்டோர் கேரளத் தலைவர்களுடன் இணைந்து செயல்பட்டனர். ஆனால் அவர்கள் அடக்குமுறை நடவடிக்கையை எதிர்கொண்டனர். போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக வைக்கத்தில் இருந்து மன்னத்து பத்மநாபன் தலைமையில் உயர்சாதியினரின் பேரணியும், நாகர்கோவிலில் இருந்து எம்பெருமாள் நாயுடு தலைமையில் கோயில் நுழைவுக்கு ஆதரவாக தெற்கில் மற்றொரு பேரணியும் நடந்தது. நாகர்கோவிலை (அன்றைக்கு திருவிதாங்கூரின் ஒருபகுதியாக இருந்தது) சேர்ந்த சிவதாணு பிள்ளை திருவனந்தபுரம் கடற்கரையில் நடந்த கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். போராட்டத்தில் பங்கெடுத்த தமிழர்களின் பெயர்களை எனது “வைக்கம் போராட்டம்” புத்தகத்தில் பதிவு செய்துள்ளேன்.

**603 நாட்கள் நீடித்த போராட்டம்:** 1924ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் தேதி தொடங்கிய வைக்கம் போராட்டம் 1925ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் தேதி முடிவுற்றது. இந்த 603 நாட்களில் பல முக்கியமான நிகழ்வுகள் நடந்துள்ளன. புதிய அரசர் அரியணை ஏறியதை ஒட்டி பெரியார், கேசவ மேனன், டி.கே.மாதவன் உள்ளிட்டோர் 1924ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30-ஆம் தேதி சிறையில் இருந்து விடுதலை செய்யப் பட்டனர். நவம்பர் 1-ஆம் தேதி உயர் சாதியினர் தொடங்கிய பேரணி நவம்பர் 13-ஆம் தேதி திருவனந்தபுரத்தை அடைந்தது. அவர்கள் ராணியிடம் பேரணியின் விளக்கக் குறிப்பை சமர்ப்பித்தனர்.

கோயில் தெருக்களில் நுழைவதற்கு அனுமதி அளிக்கும் தீர்மானம் 1925-ஆம் ஆண்டு பிப்ரவரியில் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது ஒற்றை வாக்கு வித்தியாசத்தில்தான் தோற்கடிக்கப்பட்டது. காந்தி கேரளத்திற்கு வந்து திருவாங்கூர் ராணி, சமூக சீர்திருத்தவாதி நாராயணகுரு, பழமைவாதிகள், அன்றைய காவல்துறை ஆணையர் டபள்யூ.ஹெச்.பிட் உள்ளிட்டோருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். நவம்பர் 17ஆம் தேதி போராட்டக்காரர்கள் வைக்கம் சத்தியாகிரகத்தை கைவிடுவதாக அறிவித்தனர். வைக்கம் கோயிலைச் சுற்றியுள்ள 4 தெருக்களில் 3 தெருக்களுக்குள் எல்லா சமூகத்தினரும் செல்லலாம் என நவம்பர் 23-ஆம் தேதி திருவாங்கூர் அரசு அறிவித்தது. அதன்மூலம் போராட்டம் முடிவுக்கு வந்தது. நவம்பர் 29, 1925 அன்று பெரியார் தலைமையில் வைக்கம் போராட்டம் வெற்றி விழா நடந்தது.

இந்த இயக்கத்தை நினைவுகூரும் வகையில் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்த கேரள அரசு முடிவு செய்துள்ளது. வைக்கம் போராட்ட வரலாற்றை அனைத்துத் தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்க்கும் வகையில் ஒரு ஆண்டுக்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப் படும் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார். வைக்கம் நினைவிடத்தை கேரள அரசு தொடர்ந்து பராமரித்தும், அவ்வப்போது சீரமைப்புப் பணிகளை செய்தும் வருகிறது. பெரியார் நினைவிடம் ஒன்றை அமைத்து தமிழ்நாடு அரசும் 1994ஆம் ஆண்டிலிருந்தே பராமரித்து வருகிறது. வைக்கத்தில் என்ன நடந்தது என்பதை தமிழர்கள் அறிந்துகொள்ளும் ஒரு கட்டமைப்பாக இருக்கிறது. குழந்தைகளுக்கு வைக்கம் என்று பெயர் வைக்கும் பழக்கமும் 1930 முதல் தமிழ்நாட்டில் இருக்கிறது.

வைக்கம் என்பது ஒரு நகரத்தின் பெயர் மட்டுமல்ல. அது சமூக நீதியின் சின்னம். ஜாதித் தடைகளை உடைப்பதற்கான சின்னமாய் விளங்குகிறது. வரலாற்றிலும் சமூக நீதி இயக்கத்திலும் இன்னும் அது பிரகாசமாய் எரிகிறது.

**‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் பழ. அதியமான் எழுதிய கட்டுரை**

**தமிழில் : ர. பிரகாசு**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மாநாட்டுக்கு மக்களின் பேராதரவு

(முதல் பக்கத் தொடர்ச்சி)

விவேக், சக்திவேல், ஜெகதீஷ், பெர்னாண்டஸ், மேட்டூர் முத்துராஜ், கொளத்தூர் சுதா, மாரி செட்டி, ராமமூர்த்தி.

**ஈரோடு :** திராவிடர் விடுதலைக் கழக சேலம் மாநாடு தொடர்பாக நேற்று ஈரோடு கடைவீதியில் வசூல் நடந்தது. அதில் நடந்த ஒரு சுவாரசிய சம்பவம்.

காவலாண்டியூர் ஈசுவரன், நங்கவள்ளி கிருஷ்ணன், இரத்தினசாமி உள்ளிட்ட தோழர்கள் சுமார் 10 பேர் ஒரு குழுவாக இணைந்து ஈரோட்டில் கடைவீதி வசூலில் ஈடுபட்டு கொண்டிருந்த போது,நம்மை வழிமறித்த ஒரு கேரள மாநிலத்தை சேர்ந்தவர், நம் கையில் இருந்த துண்டறிக்கையில் இருந்த தந்தை பெரியாரின் படத்தைப் பார்த்துவிட்டு, “இவர் எங்கள் தலைவர், இவரை நீங்களும் வைத்துள்ளீர்களே ?” என்று கேட்டார்.

தந்தை பெரியார் கேரளாவில் உள்ள வைக்கம் என்னும் இடத்திற்குச் சென்று, அங்குள்ள கோயிலை சுற்றி தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக் கூடாது என்று இருந்த நிலையை மாற்றுவதற்காக போராட்டம் நடத்தி, சிறைப்பட்டு அதில் வெற்றி கண்டார் என்பது வரலாறு.

எனவே, இன்றைக்கும் கேரள மாநிலத்தவர்கள் தந்தை பெரியாரை தங்களது தலைவர்களில் ஒருவராகப் போற்றுகின்றனர் என்பதற்கு நேற்றைய நிகழ்வு ஒரு சாட்சி.

**மாநாட்டில் 1000 பேருக்கான மதிய உணவுப் பொருட்கள் நன்கொடை:** ஈரோடு மாவட்டம் கோபி ஒன்றியம் அளுக்குளி ஊராட்சி கவுன்சிலர் க.தங்கம் (திமுக) அவர்கள் 30.03.23 அன்று சேலத்தில் நடைபெற உள்ள கழக மாநில மாநாட்டிற்கு மார்ச் 29 அன்று 1000 பேருக்கு மதிய உணவுக்கான அனைத்து மளிகை பொருட்கள் மற்றும் சமையலுக்கு ஆகும் செலவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு பொருட்களை கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி அவர்களிடம் வழங்கி மாநாடு சிறக்க வாழ்த்துகளை தெரிவித்தார்.

அவ்வமயம் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், ஈரோடு மாவட்ட தலைவர் சி. செல்வராஜ், ப.கார்த்தி தி.மு.க இளைஞர் அணி துணை அமைப்பாளர், மு.விக்னேஷ், ஜெகதீஸ்குமார் (திமுக), சின்னதுரை (காங்கிரஸ்) செவியூர் ஆகியோர் உடனிருந்தனர்.

**சேலம் மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம்**

ஏப்ரல் 29, 30இல் சேலத்தில் நடைபெறும் இரண்டு நாள் மாநில மாநாடு குறித்த சேலம் கிழக்கு – மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் 01.04.2023 சனி மாலை 5.00 மணி அளவில் சேலம் கருப்பூர் சக்திவேல் இல்லத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தில் சேலத்தில் இரண்டு நாட்கள் நடைபெறும் மாநில மாநாட்டிற்கான வேலை திட்டங்கள் குறித்தும் பொதுமக்களிடம் மற்றும் தனிநபர்களிடம் துண்டறிக்கைகள் விநியோகித்து மாநாடு குறித்து விளக்குவது மற்றும் நன்கொடை திரட்டுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

பேரணியை மிகவும் சிறப்பாக நடத்துவதற்காக அந்தந்த கிளைக் கழகங்கள் வரும் ஏப்ரல் 5 ஆம் தேதிக்குள் ஆண்கள், பெண்கள் ,குழந்தைகள் எத்தனை பேர் கலந்து கொள்ள உள்ளனர் என்ற பட்டியலும், மாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கு நிதி வசூலை இன்னும் தீவிரப்படுத்துவதாகவும் பேசப்பட்டது.

சேலம் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்தின் சார்பாக அமைக்கப்பட்டுள்ள வசூல் குழுவினர் சிறப்பாக செயல்பட்டு பொது மக்கள் மற்றும் வியாபார பெருமக்களிடம் துண்டறிக்கை மூலம் மாநாடு குறித்து செய்திகளை கூறி நன்கொடை திரட்டும் பணியை மிகவும் சிறப்பாக செய்து வருகின்றனர் என கழகத் தலைவர் அவர்கள் தமது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் கூறினார். மேலும் கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக பொறுப்பாளர்களும், தோழர்களும் மாநாடு குறித்த தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமது உரையில், “சேலம் மாவட்டம் என்பது எந்தவொரு நிகழ்வு நடந்தாலும் சிறப்பாக நடத்தும், அதே போல இந்த இரண்டு நாள் மாநில மாநாட்டையும் சிறப்பாக நடத்த வேண்டும் எனவும் அதற்கு தோழர்கள் ஒத்துழைப்பு என்பது மிகவும் முக்கியம் எனவும், அதேபோல் மாநாட்டிற்கு தோழர்கள் அனைவரும் குடும்பத்தார் மற்றும் நண்பர்களோடு கலந்து கொள்ள வேண்டும்” எனவும் உரையில் குறிப்பிட்டார்.

நிறைவாக சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவடைந்தது. கலந்து கொண்ட தோழர்களுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது.

# வைக்கம் போராட்டம்: பெரியாரை சிறுமைப்படுத்துவோருக்கு பதிலடி

*வைக்கம் போராட்டத்தில் பெரியார் பங்களிப்பு பெரிதாக இல்லை என்று சில பேர்வழிகள் உளறத் தொடங்கியிருக்கிறார்கள். பெரியார் மீதான காழ்ப்புணர்ச்சியில் வரலாறு புரியாது பேசும் அரை வேக்காடுகள் - வரலாற்றை ஒழுங்காகப் படித்து விட்டுப் பேச வேண்டும்.*

- *வைக்கம் போராட்டத்தில் இரண்டு முறை சிறை சென்ற ஒரே தலைவர் பெரியார் மட்டுமே. முதலில் அருவிகுட்டியில் ஒரு மாதம் சிறை; பிறகு திருவனந்தபுரத்தில் 4 மாதம் கடும் சிறை.*
- *பெரியாருக்கு முன் கைது செய்யப்பட்ட அனைவரும் அரசியல் கைதிகளாகவே நடத்தப்பட்டனர். பெரியார் மட்டுமே கிரிமினல் கைதியாக கடும் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.*
- *பெரியாருக்கு சிறையில் சிறப்பு சலுகை எதுவும் தரப்படக் கூடாது என்று நீதிமன்றமே உத்தரவிட்டது. 24 மணி நேரமும் திருவனந்தபுரம் சிறையில் கை, கால்களில் விலங்குகளுடன் கிரிமினல் கைதிக்கான உடையோடு கழுத்தில் கைதி எண் பட்டை தொங்கவிடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். வைக்கம் போராளிகளில் ஒருவரான கே.பி. கேசவமேனன், ‘பந்தனத்தில் நின்னு’ என்ற நூலில் இதைப் பதிவு செய்திருக்கிறார். தனக்கு இழைக்கப்பட்ட இந்த கொடுமைகள் குறித்து பெரியார் வெளிப்படுத்தவே இல்லை.*
- *வைக்கம் போராட்டக் களத்தில் 141 நாள்கள் இருந்தவர் பெரியார். அதில் 74 நாள்கள் சிறையிலும் 67 நாள்கள் போராட்டக் களத்திலும் தன்னை ஒப்படைத்தார்.*
- *பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம் தான் தனக்கு உந்துதலைத் தந்தது; மகர் குளத்தில் தீண்டப்படாத மக்களைத் திரட்டி, நீர் எடுக்கும் போராட்டம் நடத்த காரணமாக இருந்தது என்று அம்பேத்கரே எழுத்து வழியாகப் பதிவு செய்துள்ளார்.*
- *திரு.வி.க. ‘நவசக்தி’ பத்திரிகையில் பெரியாரின் பங்களிப்பைப் பாராட்டி ‘வைக்கம் வீரர்’ என்று பட்டம் தந்தார்.*
- *பெரியார் களத்துக்கு வந்த பிறகு தான் அது மக்கள் போராட்டமாக வெடித்தது. திருவாங்கூர் சமஸ்தானம் அதிர்ச்சி அடைந்தது. திருவாங்கூர் மன்னர் இறந்தவுடன் பதவிக்கு வந்த மகாராணி, சாலைகளைத் திறந்து விட முடிவு செய்தார். ஆனால் பேச்சு வார்த்தையை பெரியாரோடு நடத்த திவான் விரும்பவில்லை. அவ்வளவு கோபம். ராஜாஜியை அழைத்து பெரியாரிடம் பேச மாட்டோம்; காந்தியை அழைத்து வாருங்கள் என்று கூறி விட்டார்.*
- *காந்தி சமரசம் பேச முன்வந்தபோது ஈ.வெ. ராமசாமி, வீதி உரிமையைத் தொடர்ந்து கோயில் நுழைவு உரிமைப் போராட்டம் நடத்தக் கூடாது என்று திவான் நிபந்தனை விதித்தார். அதைத் தொடர்ந்து காந்தி பெரியாரிடம் பேசினார். பெரியார் கோயில் நுழைவு உரிமைக்குப் போராடுவேன் என்றாலும் இப்போது ‘வீதி உரிமை’யோடு நிறுத்திக் கொண்டு மக்களைப் பக்குவப்படுத்தி அடுத்த போராட்டத்துக்கு தயாராவேன் என்றார். அதை காந்தி திவானிடம் கூறினார். அதற்குப் பிறகு தான் மூன்று வீதிகளில் ‘தீண்டப்படாத’ மக்கள் புழங்குவதற்கு உரிமை கிடைத்தது.*
- *வைக்கம் வெற்றி விழா பொதுக் கூட்டம் 1925 நவம்பர் 24இல் வைக்கத்தில் நடந்தது. இந்த வெற்றி விழாவுக்கு தலைமை தாங்கும் தகுதி படைத்த ஒரே தலைவர் பெரியார் என்று கருதி, பெரியாரை மட்டுமே அழைத்து தலைமை தாங்கச் சொன்னார்கள். அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரே தலைவர் பெரியார் மட்டுமே. மற்றவர்கள் அனைவருமே கேரளத்திலிருந்து போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தான்.*

*இந்த வரலாறுகளைப் புரியாமல் வாய்க்கு வந்தபடி பேசுவதா? இந்த வரலாற்றுச் செய்திகளை மறுக்க முடியுமா?*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 06th April 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN